**<u>OS .07/2012 PW-1 : தமிழரசி : 05.12.2022</u>**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

நான் நெல்லியாளம் கிராமத்தில் நில அளவை எண். 2287/8 மற்றும் 2 க்கு உட்பட்ட இடத்தை பொறுத்துதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 மற்றும் 2 ம் பிரதவாதிகள் பெயரில் உள்ள சிட்டா அடங்கலினை நீக்கவேண்டும் என்று தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது பெயரிலுள்ள ஆவணத்தைதான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயர் உள்ளது என தெரிந்துக்கொண்டிர்களா என்றால் ஆதியில் எனது மாமனார் பெயரில் இருந்தது, தற்போது அந்த இடத்தில் நாங்கள்தான் வசித்து வருகிறோம்.

பிரதிவாதிகள் சர்ச்சின் பெயரில் நிலம் உள்ளது என கூறி எங்களை தாவா சொத்திலிருந்து வெளியேற சொன்னார்கள், அதனால்தான் நான் இந்த வழக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். உண்மையான பிரதிவாதிகளை மறைத்து நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து நில அளவை எண்.1287/8 க்கு உட்பட்ட பூமி CSI சர்ச்சிற்கு ஆதாரவாக 03.07.1958 ம் ஆண்டு கிரயம் கொடுக்கப்பட்டு இன்று வரை வருவாய் ஆவணங்கள் அனைத்தும் அவர்களது பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல, கடந்த 1955 ம் ஆண்டுமுதல் எனது மாமனார் அங்கு வசித்தார், அதனை தொடர்ந்து நாங்கள் அங்கு குடியிருந்து வருகிறோம்.

தாவா சொத்து அரசாங்க நிலமாகும், அதனை 1955 ம் ஆண்டுமுதல் நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். தாவாவின் உண்மையான உரிமையாளர் CSI சர்ச்சினை வழக்கில் சேர்க்காமல் தாவா தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் நாங்கள் தான் குடியிருந்து வருகிறோம் என சுவாதீன சான்று தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, சொத்து வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். வா.தா.சா.ஆ.08, 09 ஆகிய ஆவணங்கள் குறித்து Co–relation certificate–னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனக்கு படிக்க தெரியாது, அதனால் அது குறித்து என்னால் கூற இயலவில்லை. தாவா சொத்திற்கும் வா.தா.சா.ஆ.8, 9 ல் குறிப்பிட்டுள்ள நில அளவை எண்ணிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.தா.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணிற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சர்வே எண்.521 ல்தான் 30 சென்ட் இடம் உள்ளது என கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். எஸ்டேட்டிற்கும் எங்களுக்கும் நடந்த வழக்கின் தீர்ப்பு நகலை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.11 ல் கதவு எண்.12/147 பி என உள்ளது, அதற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால், அது பழைய எண் ஆகும். வா.த.சா.ஆ.12 பென்சிலில் எழுதியுள்ளது என்றால் சரிதான், அவர்கள் கொடுத்ததை நான் வாங்கிகொண்டு வந்தேன்.

வா.த.சா.ஆ.13 க்கும் பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள நில அளவை எண்.2287/8 க்கு ஆதாரவாக ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், அதன் வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேன், அதில் 6 முதல் 7 வீடுகள் உள்ளன. வா.த.சா.ஆ.14 க்கும் தாவாவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்ணிற்கும் தொடர்புள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ள

விபரத்தை நான் தாவாவில் குறிப்பிடவில்லை, ஆனால் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

தாவா சொத்தில் வீடு கட்டுவதற்குண்டான அனுமதியை நகராட்சியில் பெற்றனா என்றால், வீடு கட்டி 70 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தாவாவில் 5 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மைதான், எங்கள் கைவசம் உள்ள இடம் எனது மாமனார் காலத்திலிருந்து இருந்த இடத்தைதான் நாங்கள் மாற்றி கொடுத்தோம். வழக்கிற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள நில அளவை எண்ணிற்கும் நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் உண்மையாக யார் உங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்ற விபரம் தெரியாமல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனவே வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court, read over
/interpreted to the witness and acknowledged
by him/her to be correct.
**Sd/- (Tr. E.Pragasam, B.A., B.L.,)**
Additional District Munsif, Gudalur.